தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (இடைநிலைக்கல்வி)
செயல்முறைகள், சென்னை–06
ந.க.எண்.000668/இ/இ3/2026, நாள். 6.05.2026

......

பொருள் பள்ளிக்கல்வி – பத்ம விருதுகள்– தகுதி வாய்ந்த நபர்களின் விண்ணப்பங்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல்– தொடர்பாக.

பார்வை சென்னை–09, தலைமைச் செயலக அரசு துணைச் செயலாளர் அவர்களின் கடித எண்.2156/பொது–2/2026-1, நாள்.09.04.2026.

*****

பார்வையில் காணும் அரசுக் கடிதத்தில், 2027ஆம் ஆண்டு நடைபெற இருக்கும் குடியரசு தின விழாவில் வழங்கப்படும் பத்ம விருதுகளுக்கு இணையதளத்தில் விண்ணப்பித்தல் சார்பாக விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வையில் காணும் அரசுக் கடிதத்தின் மீது தக்க நடவடிக்கையின் பொருட்டு இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. இப்பொருள் சார்ந்து தகுதி வாய்ந்த நபர்கள் இருப்பின் அவர்களின் விண்ணப்பத்தினை பெற்று 20.06.2026க்குள் http://awards.gov.in என்ற இணைய தளத்தில் பதிவேற்றம் செய்து அதன் அறிக்கையினையும், தகுதி வாய்ந்த நபர்கள் எவரும் இல்லையெனில் "இன்மை" அறிக்கையினை இவ்வியக்ககத்திற்கு அனுப்பி வைக்குமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு: பார்வையில் காணும் அரசுக் கடித நகல்

இணை இயக்குநர்
(இடைநிலைக் கல்வி)

பெறுநர்
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
(மின்னஞ்சல் மூலம்)

நகல்
அரசு துணைச் செயலாளர்,
பள்ளிக்கல்வித்துறை (பொது–2)
தலைமைச் செயலகம்,
சென்னை–9. (தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது)

CHIEF EDUCATIONAL OFFICER
VELLORE-632 009.